# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2212/54 - 2021 ජනවාරි මස 29 වැනි සිකුරාදා - 2021.01.29

*2212/54 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

### உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்

*ச. வ. பி. 13/ 1978* (III)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

உயர் நீதிமன்ற விதிகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 136 ஆம் உறுப்புரையின் கீழ் பிரதம நீதியரசரினாலும் அவ்வுறுப்புரையின் கீழ் அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளினாலும் ஆக்கப்பட்ட விதிகள்.

ஜயந்த ஜயசூரிய,
பிரதம நீதியரசர்.

பி. பீ. அளுவிஹார,
உயர் நீதிமன்ற நீதிபதி.

பீ. பத்மன் சூரசேன,
உயர் நீதிமன்ற நீதிபதி.

யசந்த கோதாகொட,
உயர் நீதிமன்ற நீதிபதி.

கொழும்பு,
*2021, சனவரி 27.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2021 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற (இலத்திரனியல் கோப்பிடுதல் மற்றும் அவசர எண்ணிமை மாயக் கேட்புக்கள்) (விசேட ஏற்பாடுகள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் ''ஏலவேயுள்ள விதிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படுபவையும்) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறானவையும் 1991, யூன் மாதம் 7 ஆந் திகதிய 665/ 32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டவையுமான 1990 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற விதிகளின் ஏற்பாடுகளினது பொதுமைக்குப் பங்கமின்றி, இவ்விதிகள்–

(அ) விண்ணப்பங்களையும், மேன்முறையீடுகளையும், பிரேரணைகளையும் மற்றும் அத்தகைய விண்ணப்பங்களும் மேன்முறையீடுகளும் தொடர்பான ஏனைய ஆவணங்களையும் உயர் நீதிமன்றத்தில் இலத்திரனியல் முறையில் கோப்பிடுதலுக்கும் ; அத்துடன்

(ஆ) 3 ஆம் விதியின் நியதிகளின்படி அவசரமானவையெனக் கருதப்படுபவையும், இவ்விதிகளின்கீழ் அல்லது ஏலவேயுள்ள விதிகளின்கீழ் கோப்பிடப்பட்டவையுமான விண்ணப்பங்கள், மேன்முறையீடுகள் மற்றும் பிரேரணைகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் அவசர எண்ணிமை மாயக் கேட்புக்கள் நடாத்தப்படுதலுக்கும், ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. இவ்விதிகளின் கீழ் அல்லது ஏலவேயுள்ள விதிகளின்கீழ் கோப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது ஒரு பிரேரணை, உயர் நீதிமன்றத்தின் சுற்றாடலினுள் தேசியப் பாதுகாப்பு, பொது மக்களின் காப்பு அல்லது ஒழுங்கமைதி மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய ஏதேனும் காரணத்தினால் மரபு முறையான பௌதீகக் கேட்புக்களை நடாத்துவதற்கான இயலாமையையும் மற்றும் மேற்கூறப்பட்ட இயலாமையின்போது அவசரமான விடயங்களில் உயர் நீதிமன்றத்தினால் சுமுகமானதும் இடையீடில்லாததுமான நீதி நிருவாகத்தைக் கிடைக்கக்கூடியதாக்குவதற்கான தேவையையும் கருத்திற்கொண்டு, அத்தகைய விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது பிரேரணை, இவ்விதிகளின் நியதிகளின்படி (இதனகத்துப் பின்னர் ''எண்ணிமைக் கேட்பு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) அவசர எண்ணிமை மாயக் கேட்பொன்றைத் தேவைப்படுத்துகின்றதெனப் பிரதம நீதியரசரினால் அதற்கெனப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி கருதினால், அவசரமானதெனக் கருதப்படுதல் வேண்டும்.

4. (1) உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பமொன்றை அல்லது மேன்முறையீடொன்றை இலத்திரனியல் முறையில் கோப்பிடுவதற்கு உட்கருதுகின்ற ஆளொருவர், அல்லது ஏலவேயுள்ள விதிகளின்கீழ் உயர் நீதிமன்றத்தில் ஏலவே கோப்பிடப்பட்ட ஒரு விண்ணப்பம் அல்லது மேன்முறையீடு தொடர்பான ஏனைய ஆவணங்களை உயர் நீதிமன்றத்தில் இலத்திரனியல் முறையில் கோப்பிடுவதற்கு உட்கருதுகின்ற அத்தகைய விண்ணப்பத்துக்கான அல்லது மேன்முறையீட்டுக்கான, திறத்தவரொருவர், தாமாகவோ அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற ஒரு சட்டத்தரணியினூடாகவோ (இதனகத்துப் பின்னர் ''பதிவாளர்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு, விண்ணப்பத்தை, மேன்முறையீட்டை அல்லது ஏனைய ஆவணங்களைப் பிரதம நீதியரசருக்கும் உயர் நீதிமன்றத்தின் ஏனைய நீதிபதிகளுக்கும் எடுத்துரைக்கின்ற பிரேரணையொன்றுடன் சேர்த்து இலத்திரனியல் அஞ்சலினூடாகச் சமர்ப்பிக்கலாம்.

(2) (அ) எண்ணிமைக் கேட்பொன்றை நடாத்துவதற்கு நாடுகின்ற உயர் நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்குக்கான அல்லது விடயத்துக்கான விண்ணப்பகாரர் ஒருவர், மேன்முறையீட்டாளர் ஒருவர் அல்லது (இதனகத்துப் பின்னர் ''திறத்தவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான) வேறு திறத்தவர் ஒருவர், தாமாகவோ அல்லது அவரது சார்பில் செயலாற்றுகின்ற ஒரு சட்டத்தரணியினூடாகவோ, உப விதி (1) இல் குறித்துரைக்கப்பட்டவாறாகப் பிரேரணையொன்றை இலத்திரனியல் முறையில் கோப்பிடுதல் வேண்டும்.

(ஆ) எண்ணிமைக் கேட்பொன்றின் மூலம் விண்ணப்பத்தின், மேன்முறையீட்டின் அல்லது பிரேரணையின் கேட்பை அனுமதிக்கின்றதும் நியாயப்படுத்துகின்றதுமான காரணத்தை அத்தகைய பிரேரணை குறிப்பான முறையிலும் விபரமாகவும் மற்றவற்றுக்கிடையில் குறிப்பிடுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பிரேரணையானது, அத்தகைய கேட்பை நாடுகின்ற திறத்தவரின் இலத்திரனியல் அஞ்சல் முகவரியும் செல்லிடத் தொலைபேசி இலக்கமும் உட்பட முழுப்பெயரையும் தொடர்பு விபரங்களையும் அல்லது எண்ணிமைக் கேட்புக்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்குப் பதிவாளர் எந்தச் சட்டத்தரணியொருவருடன் தொடர்புகொள்ளலாமோ அந்தச் சட்டத்தரணியொருவரின் அத்தகைய விபரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) ஏலவேயுள்ள விதிகளின் ஏற்பாடுகள் இவ்விதிகளுடன் ஒவ்வாதனவாகவிராத அளவு வரை அத்தகைய ஏற்பாடுகள் உப விதிகள் (1) மற்றும் (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும், மேன்முறையீட்டுக்கும், பிரேரணைக்கும் அல்லது ஏனைய ஆவணத்துக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) உப விதிகள் (1) மற்றும் (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பமும், மேன்முறையீடும், பிரேரணையும் அல்லது ஏனைய ஆவணமும்-

(அ) 1.5 வரி இடைவெளியுடன் டைம்ஸ் நியூ ரோமனின் 12 பொன்ட் அளவைப் பயன்படுத்தி, பக்கத்தின் இடது மற்றும் வலது பக்கங்களில் 4 செ. மீ. விளிம்புகளுடனும் அத்துடன் பக்கத்தின் 2 செ. மீ. மேல் மற்றும் கீழ் ஓரங்களுடனும், A 4 அளவுப் பக்க அமைப்பானது கணினி மூலம் தோற்றுவிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) தேவைப்படுமிடத்து கையொப்பங்கள் அல்லது சான்றுப்படுத்துகைகள் உட்பட, ஏலவேயுள்ள விதிகளுக்கு இணங்கியொழுகுகின்ற ஆவணங்களுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும் ;

(இ) எவையேனும் உள்ளடக்கக் குறியின்றித் தயாரிக்கப்பட்டு வருடப்படுதல் வேண்டுமென்பதுடன் இயன்றபோதெல்லாம் கட்புல எழுத்துணரியுடனும் (OCR) ஓர் அங்குலத்துக்கு 300 புள்ளிகளினதாக (dpi) இருத்தலும் வேண்டும் ;

(ஈ) முடும் பிரேரணையிலிருந்து தொடங்கி, தனியொரு தொடரில் ஒவ்வொரு பக்கத்தினதும் அடியில் பக்க இலக்கத்துடன் தனியொரு காவத்தக்க ஆவண வடிவத்தினுள் (PDF) இயன்றவிடத்தெல்லாம் ஒன்றுசேர்க்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(உ) ஒரு விண்ணப்பம், மேன்முறையீடு, பிரேரணை, அதன் கீழான ஏனைய ஆவணங்கள் அல்லது இணைப்புக்கள் கோப்பளவு 20 MB ஐ விஞ்சுகின்ற பட்சத்தில், அத்தகைய விண்ணப்பம், மேன்முறையீடு, பிரேரணை, ஏனைய ஆவணங்கள் அல்லது இணைப்புக்கள், குறிக்கப்பட்ட கோப்பளவை எய்துவதற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பல்கூட்டான PDF கோப்புக்களாகப் பிரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இலத்திரனியல் அஞ்சல்களினூடாகச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும் அல்லது ‘கிளவுட் களஞ்சியப்படுத்துகை’ போன்ற பொருத்தமான தரவுக் களஞ்சியப்படுத்துகை இணைய அடிப்படையிலான பொறிமுறையில் களஞ்சியப்படுத்தப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அத்தகைய களஞ்சியப்படுத்துகைப் பொறிமுறைக்கு அவசியமான அணுக்கம் மின்னஞ்சலினூடாகப் பதிவாளருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

(5) இவ்விதிகளின் நியதிகளின்படி ஆவணங்களை இலத்திரனியல் முறையில் கோப்பிடுகின்ற திறத்தவர் அல்லது ஒரு சட்டத்தரணி, அவ்வாறு கோப்பிடப்பட்ட அத்தகைய ஆவணங்களின் வன்பிரதிகளை விடயத்துக்கேற்ப, அத்தகைய திறத்தவரின் அல்லது சட்டத்தரணியின் காப்பான கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் உயர் நீதிமன்றத்தின் பணிப்பின் மீது அவற்றைப் பதிவாளருக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

5. (1) தனியறையில் அமர்கின்ற பிரதம நீதியரசரினால் அதற்கெனப் பெயர்குறிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் 4 ஆம் விதியின்கீழ் உயர் நீதிமன்றத்தில் இலத்திரனியல் முறையில் கோப்பிடப்பட்ட பிரேரணைகளை மற்றும் அவசியமானவிடத்து, அவற்றோடு கோப்பிடப்பட்ட விண்ணப்பங்களை, மேன்முறையீடுகளை அல்லது ஏனைய ஆவணங்களைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பங்கள், மேன்முறையீடுகள் அல்லது பிரேரணைகள் எண்ணிமைக் கேட்புக்காக எடுக்கப்படுதல் வேண்டுமாவென்பது பற்றி முடிபு செய்தலும் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றத்தில் இலத்திரனியல் முறையில் கோப்பிடப்பட்ட ஏதேனும் பிரேரணை தொடர்பான விடயம் 3 ஆம் விதியின் கருத்துக்குட்பட அவசரமானதாகவுள்ளதென்றும் அத்தகைய விடயத்தை எண்ணிமைக் கேட்பொன்றுக்காக ஆற்றுப்படுத்துவது உசிதமானதாகவுள்ளதென்றும் அத்தகைய நீதிபதியின் திருப்திக்குத் தோன்றுமிடத்து, அத்தகைய விடயம் தொடர்பான எண்ணிமைக் கேட்பொன்றுக்கு ஒழுங்கேற்பாடு செய்யும்படி அவர் தோதான பணிப்பொன்றைப் பதிவாளருக்கு விடுத்தல் வேண்டும்.

(3) எண்ணிமைக் கேட்பொன்றுக்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்வதற்கென 6 ஆம் விதியிற் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பதிவாளரின் கடமையாதல் வேண்டும்.

6. (1) பதிவாளரானவர், திறத்தவரை அல்லது திறத்தவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணியை-

(அ) இலத்திரனியல் கோப்பிடுதல் மற்றும் எண்ணிமைக் கேட்புத் தொடர்பில் ஏற்புடையற்பாலனவான இயைபான கட்டணங்களைச் செலுத்தி, கொடுப்பனவுக்கான எண்பிப்பைப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கும்படியும் ;

(ஆ) பதிவாளரினால் குறித்துரைக்கப்பட்ட முறையில் விண்ணப்பத்தை, மேன்முறையீட்டை அல்லது பிரேரணையைக் கோப்பிடுவது தொடர்பாக அத்தகைய விண்ணப்பத்துக்கான அல்லது மேன்முறையீட்டுக்கான எல்லாத் திறத்தவர்களுக்கும் அறிவிக்கும்படியும், அத்தகைய அறிவித்தல் பற்றிய எண்பிப்பைப் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கும்படியும்,

தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்ப, திறத்தவர் அல்லது சட்டத்தரணி உப விதி (1) (அ) வுக்கு இணங்கியொழுகச் செயலாற்றியுள்ளாரெனப் பதிவாளர் திருப்திப்பட்டாலொழிய, அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தை மேன்முறையீட்டை அல்லது பிரேரணையைச் செய்முறைப்படுத்துதலாகாது.

(3) திறத்தவர் அல்லது சட்டத்தரணி முதலாவது சந்தர்ப்பத்தில் இவ்விதியின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, அத்தகைய திறத்தவர் அல்லது சட்டத்தரணி அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதியினுள் இவ்விதிக்கு இணங்கியொழுகச் செயலாற்றினாலொழிய, அத்தகைய விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது பிரேரணை செய்முறைப்படுதத்தப்படமாட்டாது என இலத்திரனியல் அஞ்சலினூடாகப் பதிவாளரினால் அவருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(4) திறத்தவர் அல்லது சட்டத்தரணி பதிவாளரின் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து, விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது பிரேரணை விதி 5 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நீதிபதிக்குத் தோதான பணிப்பொன்றுக்காக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(5) விதி 4 இன்கீழ் கோப்பிடப்பட்ட ஏதேனும் பிரேரணை எண்ணிமைக் கேட்பொன்றை அனுமதிக்கின்றதென்றும், விடயத்துக்கேற்ப, திறத்தவர் அல்லது சட்டத்தரணி இவ்விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றாரென்றும் விதி 5 இன் உபவிதி (2) இன் கீழ் முடிபுசெய்யப்பட்டுள்ளவிடத்து பதிவாளர், விதி 5 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நீதிபதியின் பணிப்பின் மீது எண்ணிமைக் கேட்புக்கானவொரு திகதியையும் நேரத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(6) எண்ணிமைக் கேட்புக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியும் நேரமும், விடயத்துக்கேற்ப, வழக்கை அல்லது விடயத்தைக் கேட்பதற்குப் பிரதம நீதியரசரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நீதிபதிகளுக்கும் மற்றும் திறத்தவர்களுக்கும் அவர்களின் சட்டத்தரணிகளுக்கும் ஒன்றில் இலத்திரனியல் அஞ்சலினூடாக அல்லது தொலைபேசி மூலம் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

7. (1) ஒரு முறையான எண்ணிமைக் கேட்பு நடாத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் நோக்குடன், ஒவ்வொரு திறத்தவரும்.

(அ) எண்ணிமைக் கேட்பானது, பதிவாளரினாற் குறித்துரைக்கப்பட்ட உள்ளபடியான நேர சமகால அல்லது ஏறத்தாழ சமகால இணைய அடிப்படையிலான காணொளி உரையாற்றுகின்ற தளமொன்றைப் பயன்படுத்தி நடாத்தப்படுவதனையும்,

(ஆ) ஓர் எண்ணிமைக் கேட்பில் பங்குபற்றும்போது ஓர் இணைய நிழற்படக்கருவி ஒலிபரப்பி மற்றும் ஒலிபெருக்கியுடன் தகுந்தமுறையில் செயற்படுகின்றவொரு கணினியை அவர் கொண்டிருப்பதனையும்,

(இ) எண்ணிமைக் கேட்பில் பங்குபற்றும்போது பொருத்தமான மற்றும் அமைதியான அமைவிடம் பயன்படுத்தப்படுவதனையும் திரையின்மீது வெளிக்காட்டப்படுவதும், அவருக்குப் பின்னால் விரிவானதல்லாத மற்றும் வெறுமையான பின்னணியைக் கொண்டதுமான இடமொன்றில் அவர் இருப்பதனையும்;

(ஈ) எண்ணிமைக் கேட்பைத் தொடங்குவதற்கென எல்லாத் திறத்தவர்களிடையேயும் இணையத் தொடுப்பினதும் வலையமைப்பினதும் முறையான செயற்பாட்டைச் சரிபார்ப்பதற்கென, எண்ணிமைக் கேட்புக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்துக்கு ஆகக்குறைந்தது பதினைந்து நிமிடங்களுக்கு முன்னரேனும் இயங்கலையில் அவர் தொடர்பு கொள்ளப்படக்கூடியவராக இருப்பதனையும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) எண்ணிமைக் கேட்பில் பங்குபற்றுகின்ற ஒரு சட்டத்தரணி, "வெளிக்காட்டல் பெயராக" அவரது பெயரைத் தகப்பனின் பெயருடன் பயன்படுத்துதல் வேண்டும்.

8. (1) ஓர் எண்ணிமைக் கேட்பில் பங்குபற்றுவதற்குப் பின்வரும் ஆட்கள் உரித்துடையோராதல் வேண்டும்.

(அ) முறையான திறத்தவர்களின் சட்டத்தரணிகள்;

(ஆ) விண்ணப்பத்துக்கான, மேன்முறையீட்டுக்கான அல்லது பிரேரணைக்கான திறத்தவர்கள் அல்லது அவர்களின் சட்டத்தரணிகளினூடாகப் பெறப்பட்ட உயர்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள், அத்தகைய சட்டத்தரணிகளினால் பயன்படுத்தப்பட்ட கணினிக்கு அருகாமையில் இருப்பதன்மூலம் அவர்கள் எண்ணிமைக் கேட்பின் வழக்கு நடவடிக்கைகளை அவதானிக்கலாம்.

(இ) சட்டத்தரணியொருவரினால் பிரதிநிதித்துவப்படாத விண்ணப்பத்துக்கான, மேன்முறையீட்டுக்கான அல்லது பிரேரணைக்கான திறத்தவர்கள் ; அத்துடன்

(ஈ) உயர்நீதிமன்ற அலுவலர்கள்.

(2) காணொளிச் சட்டகத்தினுள் உள்ளீர்க்கப்படாத ஆட்களின் விபரங்களுட்பட அத்தகைய எல்லா ஆட்களும், எண்ணிமைக் கேட்பின் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கு முன்னர், தமது பெயர்கள், அடையாளங்காண் விபரங்கள் மற்றும் தொடர்பு விபரங்களைப் பதிவாளருக்குத் தெரிவிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

ஆயின், எவ்வாறாயினும், சமுகமளித்திருக்கும் எல்லா ஆட்களும் கணினியின் இணைய நிழற்படக்கருவியின் பரப்பெல்லையினுள் அமர்வதற்கான எல்லா முயற்சிகளும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) ஆளொருவரின் வருகைக்காக அல்லது சமுகமளித்தலுக்காக உயர்நீதிமன்றத்தின் முன்னனுமதி பெறப்பட்டிருந்தாலொழிய, ஓர் எண்ணிமைக் கேட்புக்கு ஆளொருவர் அவ்வாறு வருகை தருதலோ அல்லது அதன் சுற்றாடலில் சமுகமளித்தலோ ஆகாது.

(4) நீதிமன்றத்திடமிருந்து முன்னனுமதியைப் பெறாமல் ஆளொருவர் நீதிமன்றத்தில் உரையாற்றுதலாகாது அல்லது அத்தகைய நீதிமன்றத்தின் கவனத்துக்காக ஏதேனும் விடயத்தை வெளிக்காட்டுதலாகாது.

(5) நீதிமன்றத்திடமிருந்து முன்னனுமதி பெறப்பட்டிருந்தாலொழிய, கணினியின் இணைய நிழற்படக்கருவியும் மற்றும் காணொளி உரையாற்றுகின்ற தளத்திலுள்ள "காணொளி" விருப்புத்தெரிவும் எண்ணிமைக் கேட்பின்போது எல்லா நேரங்களிலும் தொழிற்படுகின்றனவாக வைத்திருக்கப்படுவதனைத் திறத்தவர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) ஓர் எண்ணிமைக் கேட்பின் முழுமையை அல்லது பாகத்தை ஒரு காணொளி, செவிப்புல, எண்ணிமை வடிவத்தில் அல்லது வேறேதேனும் வடிவத்தில் பதிவதிலிருந்து, பிரதியெடுப்பதிலிருந்து, களஞ்சியப்படுத்துவதிலிருந்து, பகிர்வதிலிருந்து, ஒலிபரப்புவதிலிருந்து, ஒளிபரப்புவதிலிருந்து அல்லது வேறு வகையில் கடத்துவதிலிருந்து எல்லா ஆட்களும் கண்டிப்பான முறையில் தடைசெய்யப்படுகின்றனர்.

(7) எண்ணிமைக் கேட்பொன்றில் பங்குபற்றுகின்ற எல்லாத் திறத்தவர்களும், கேட்பை நீதிமன்றம் முடிவுறுத்தும் வரை, இயங்கலையில் தொடர்புகொள்ளப்படக்கூடியவர்களாதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், திறத்தவரொருவர், நீதிமன்றத்தின் முன்னனுமதியுடன், எண்ணிமைக் கேட்பில், அவர் பங்குபற்றும் இடத்தை விட்டு நீங்கலாம், அல்லது "காணொளி" விருப்புத் தெரிவைத் தொடர்பறுக்கலாம்.

(8) திறத்தவரொருவர் தொழினுட்ப உதவி தேவையாகவுள்ள ஏதேனும் சிரமத்துக்குட்படின், அத்தகைய சிரமம் தீர்த்துவைக்கப்படும் வரை அல்லது நீதிமன்றத்தின் அனுமதியுடன் மாற்று முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்படும் வரை எண்ணிமைக் கேட்பை ஒத்திவைப்பதற்கு அத்தகைய திறத்தவர் அத்தகைய நீதிமன்றத்திடமிருந்து அனுமதி நாடலாம்.

(9) எண்ணிமைக் கேட்பொன்றில் கையாளப்பட்ட ஒரு விண்ணப்பம், மேன்முறையீடு அல்லது ஒரு பிரேரணை தொடர்பான வழக்கு நடவடிக்கைகள், ஒன்றில் எண்ணிமைக் கேட்பில் மேற்கொண்ட தொடரொன்றாக அல்லது மரபுமுறையான பௌதீகக் கேட்பொன்றாக மேற்கொண்டு நடாத்தப்படலாம்.

9. ஒவ்வோர் எண்ணிமைக் கேட்பும் உச்சளவில் இயன்றளவுவரை உயர்நீதிமன்றத்திலான கேட்புக்களுக்குப் பொதுவாக ஏற்புடையற்பாலனவான உயர்நீதிமன்றத்தின் ஏலவேயுள்ள விதிகளுக்கிணங்கியொழுக நடாத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் நீதிபதிகளினதும் 8 ஆம் விதியின் உபவிதி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களினதும் பௌதீகப் பங்குபற்றுகையுடன் உயர் நீதிமன்றத்தில் நடாத்தப்பட்ட ஒரு வழக்கு நடவடிக்கையாகக் கருதப்படுதலும் வேண்டும்.

10. இவ்விதிகளின் நோக்கங்களுக்காக "ஏனைய ஆணவங்கள்" என்பது, ஆட்சேபனைகள், எதிர் சத்தியக்கடுதாசிகள், எழுத்திலான சமர்ப்பணங்கள் மற்றும் உயர்நீதிமன்றத்திலான ஏதேனும் வழக்கு அல்லது விடயம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் கோப்பிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட வேறெவையேனும் ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

2-249

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.